TAMIL NADU LEGISLATURE
1 - OCT 1971
MADRAS

தமிழ் நாடு சட்டப் பேரவை.

புதன்கிழமை, 1970 செப்டம்பர் 2.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Pay scales of Colllege Librarians.

*185 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Health be pleased to state:

(*a*) whether it is a fact that the Government of Tamil Nadu accepted the U.G.Cs. recommendation of pay scale for College Librarians;

(*b*) the pay scale of College Librarians before the U.G.Cs. recommendation, and after their recommendation; and

(*c*) the date from which the U.G.C. pay scale was implemented for the College Librarians?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) 1—4—1966 தேதிக்கு முன்பு, கல்லூரிகளில் உள்ள பட்டதாரி நூலகர்களுக்கு ரூ. 140—5—180—10—250 சம்பள வீதத்தில் சம்பளம் வழங்கப்பட்டது. பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு பரிவுரை செய்த சம்பள வீதம் செயலுக்குக் கொண்டு வரப்பட்ட பிறகு, எம்.ஏ./எம்.எஸ்.ஸி./எம்.காம். தகுதிகள் கொண்டுள்ளவர்களும், இரண்டுக்கு அதிகமான பட்ட மேற்படிப்புப் பாட முறைகள் உள்ள பட்ட மேற்படிப்புக் கல்லூரிகளில் உண்மையில் பணிபுரிபவர்களுமாகிய நூலகர்கள் 1—4—1966 முதற்கொண்டு, ரூ. 300—25—600 சம்பள வீதத்தில் சம்பளம் பெற உரிமையுடையவர்கள் ஆவர். பிற கல்லூரிகளில் உள்ள பட்டதாரி நூலகர்களுக்கு 1—4—1966 முதல் ரூ. 250—15—400 என்ற சம்பள வீதத்தில் சம்பளம் வழங்கப்படும்.

(உ) 1—4—1966 முதல் செயல்படுத்தப்படும்.

திரு. கே. விநயகம்: தலைவர் அவர்களே, இப்படி யுனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் சிபார்சு செய்ததன் விளைவாக ஏற்படுகிற வித்தியாசம் என்ன? அந்த அதிகப் பணத்தைக் கொடுக்க வேண்டிய நிலைமை கல்லூரிக்கு ஏற்பட்டிருக்கிறதா? அல்லது யுனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷனே இந்த வித்தியாசத்தை—அதிகச் செலவை—ஏற்றுக்கொள்ளுகிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, யுனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன், கல்லூரிப் பேராசிரியர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஊதிய விகிதம் அமைத்துத்தரும்போது ஃபிஸிகல்

டைரக்டர்கள், லைப்ரேரியன்கள் ஆகியவர்களுக்குக் கொடுக்காமல் ஒதுக்கியிருந்தார்கள். அவர்களுக்கும் கொடுக்கப்படவேண்டும் என்பதன் அவசியத்தைச் சுட்டிக்காட்டி 4—1—1966 அன்று அரசாங்கம் கடிதம் எழுதியது. யுனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. ஆணை எதிர்பார்த்தும் வராததால் தமிழக அரசே அந்த ஊதியத்தைத் தருவதாக 28—4—1968-இல் ஒத்துக்கொண்டது. அதற்குப் பிறகு யுனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் 1—4—1966-லிருந்து அந்தச் சம்பள விகிதத்தைத் தருகிறார்கள். ஏற்கனவே ரூ. 140—5—180—10—250 என்றிருந்த சம்பள விகிதத்தை இப்பொழுது ரூ. 300—25—600 என்று மாற்றியமைத் திருக்கிறார்கள்.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, நூலகங்களில் பணி புரிகிறவர்களைப் பொறுத்த வரையில், பட்டப் படிப்பு படித்தவர்களாக இருந்தாலும், பட்டப் படிப்பு இல்லாதவர்களாக இருந்தாலும், ஒரே வேலை பார்க்கிறவர்களுக்கு ஒரே விகிதச் சம்பளம் கொடுக்காமல் வேறுபாடு இருக்கிறதா? அப்படியிருந்தால், ஒரே வித சம்பளம் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே குறிப்பிட்ட கல்வித்தகுதி உள்ளவர்களைத்தான் அந்தப் பதவியில் அமர்த்தவேண்டும் என்று கல்வித் தகுதி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அது பட்டப் படிப்பு என்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. எம்.ஏ., எம்.எஸ்.ஸி., எம்.காம். பட்டத் தகுதி பெற்றவர்களுக்கு போஸ்ட்—கிராஜுவேட் கல்லூரியில் இருப்பவர்களுக்கு ஒருவித சம்பள விகிதம் தரப்படுகிறது. போஸ்ட்–கிராஜுவேட் இல்லாத கல்லூரிகளில் இருப்பவர்களுக்கு ஒருவித சம்பளம் தரப்படுகிறது. நூலகர்களும் விளையாட்டுத்துறை ஆசிரியர்களும் பட்டப் படிப்புத் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : It is said that service of teachers of colleges who are handling mathematics, physics and chemistry are considered early and they are given higher status and pay and other things.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி, கல்லூரி நூலகர்களின் சம்பள வீதங்களைப் பற்றியது.

THIRU K. S. KOTHANDARAMIAH : In the case of language teachers in particular, and those who handle non-Tamil languages their case is not considered early and they are not given higher status quickly.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அது பற்றிய விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடவும்.

DR. H. V. HANDE : Is it not a fact that there is usually inordinate delay between the recommendations of the U.G.C. and its implementation by the State Government? Even in the case of Librarians, it took a long time. Similarly in the case of a number of other wings of the University, even though the U.G.C. had recommended higher scales, they have not been given effect to.

1970 செப்டம்பர் 2]

For instance in Jain College in Madras both the librarians and lecturers have not been getting U.G.C. scales of pay, even though representations hav been made to the concerned authorities. Will the Government tell us why there is such inordinate delay between recommendation and implementation?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பல்கலைக்கழக மானியக்குழு முதல்கட்ட சிபார்சு செய்தபோது, பிஸிகல் டைரக்டர்களுக்கும் லைப்ரேரியன்களுக்கும் சிபார்சு செய்யவில்லை. பேராசிரியர்களுக்கும் மற்றவர்களுக்கும் உரிய விகிதங்களைச் சிபார்சு செய்திருந்தார்கள். ஃபிஸிகல் டைரக்டர்களுக்கும், லைப்ரேரியன்களுக்கும் பல்கலைக்கழக மானியக் குழுவின் சிபார்சு அடிப்படையில் சம்பளம் தரவேண்டும் என்று அரசாங்கம் 4—1—1966 அன்று கடிதம் எழுதிற்று. அவர்களிடமிருந்து, அதற்கு ஒத்துக்கொண்டு பதில் வரவில்லை. இந்திய அரசாங்கத்தினுடைய பதிலை எதிர்பார்த்து இந்த அரசாங்கமே அந்த அளவு ஊதியத்தைத் தருவது என்று முடிவு எடுத்தது. அதற்குப் பிறகு யுனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் ஃபிஸிகல் டைரக்டர்களுக்கும் லைப்ரேரியன்களுக்கும்—எம்.ஏ., எம்.எஸ்.ஸி., எம்.காம். பட்டத் தகுதி பெற்றவர்களுக்கு—போஸ்ட்-கிராஜுவேட் இன்ஸ்டிட்யூட்டில் இருக்கிறவர்களுக்கு ரூ. 300—25—600 என்ற சம்பள விகிதமும், மற்றைய கல்லூரிகளில் வேலை பார்ப்பவர்களுக்கு ரூ. 250—15—400 என்ற சம்பள விகிதமும் சிபார்சு செய்யப்பட்டு, அது 1—4—1966 இலிருந்து கொடுக்கப்படலாம் என்று உத்தரவு இடப்பட்டிருக்கிறது.

ஜெயின் கல்லூரியைப் பொறுத்தவரையில், அவர்கள் பெறுததற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. அவர்களுக்கும் தந்திருக்க வேண்டும். தரவில்லையென்றால், கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால் அதுபற்றி கவனித்துத் தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

Dr. H. V. HANDE: With regard to the physical directors also there is difference of opinion between Government and the Physical Directors' Association. The qualification for a physical director is not considered, due to some lacuna, as a post-graduate qualification. After B.Sc., or B.A., they do this physical director's course. So, normally it is considered in other States as a post-graduate qualification. But in our State, due to some unforeseen reason, it is not considered as post-graduate qualification and they are not getting the scale of pay which a post-graduate lecturer, is allowed. Will this Government come forward and see. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வி, லைப்ரேரியன்களுடைய சம்பள விகிதம் பற்றியது. நீங்கள் ஃபிஸிகல் டைரக்டர்களை பற்றி குறிப்பிடுகிறீர்கள்.

Dr. H.V. HANDE: This problem is also combined with it. The recommendation was for both the librarians and physical directors.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருந்தாலும், மூலக் கேள்வி லைப்ரேரியன்களைப் பற்றியது.

Dr. H. V. HANDE: It is a combined problem. Will the Government clarify why they have not declared this as a post-graduate qualification even though they do this training after graduation.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்பு இல்லை. மற்ற மாநிலங்களில் கொடுக்கப் படும் தகுதி இங்கே கொடுக்கப்படவில்லையென்றால், கொடுக்க வேண்டும் என்று அவர்களிடமிருந்து கோரிக்கை வந்தால் அதுபற்றி ஆலோசித்துத் தக்க முடிவு எடுக்கலாம்.

மல்லியத்திலுள்ள தனியார் உயர்நிலைப் பள்ளி

* 186 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தாலுக்கா மல்லியத்தில் உள்ள தனியார் நடத்தும் உயர் நிலைப் பள்ளிக்கு 1969–70-ஆம் ஆண்டில் அரசு வழங்கிய மான்யத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: மல்லியத்தில் மானியம் பெறும் உயர்நிலைப் பள்ளி இல்லை. ஆனால் அங்கு மானியம் பெறும் உயர் தொடக்கப்பள்ளி ஒன்று உள்ளது. அதற்கு 1969–70-ஆம் ஆண்டில் கிடைத்த மான்யம் ரூ. 11,742.

திரு. கொளத்தூர் கோதண்டம்: தலைவர் அவர்களே, சம்பந்தப் பட்ட பள்ளியினுடைய நிர்வாகம் சரியான முறையிலே நடைபெற வில்லை என்ற புகார் அரசுக்கு வந்திருக்கிறதா? அப்படியானால் அதன்பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அதைப்பற்றிய குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திருமயம் அரசு உயர்நிலைப்பள்ளிக்கு விளையாடுமிடம்

* 187 வினா—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் அரசினர் உயர்நிலைப்பள்ளி மாணாக்கர்கள் தங்கட்கு விளையாட்டிடம் தேவை என்பது குறித்து 1969 டிசம்பர் திங்களில் அரசுக்கு ஏதேனும் வேண்டுகோள் மனு அனுப்பி யுள்ளனரா?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) பள்ளிக்கு அருகாமையிலுள்ள அரசாங்க புறம்போக்கு நிலத்தை, விளையாட்டிடத்திற்காக ஒப்படைக்க வேண்டுமென்று மாணவர்கள் விரும்பினார்கள். பள்ளிக் கல்வி இயக்குநர் தக்க நட வடிக்கை எடுத்து வருகிறார்.